**கவனிக்க.**- 2015.09.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.**-இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் குருநாகல் மற்றும் குளியாபிட்டி நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று மும்மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1932 - 2015 සැප්තැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2015.09.11
*1932 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 638 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 639 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 641 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 348*

*எம்ஓடி/டிஈஎப்/2/01/ஈஎன்எல்/07/டீஓசீடி.*

### *இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை*

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

*பின்வரும் பெயருடையவர் 2014.07.01 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் லெப்டினன்ட் கர்னல் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் இலங்கைத் தரைப்படை மருத்துவச் சிறப்பணிக்கு உள்ளிடுதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*தீபால் சஞ்ஜய ஹெய்யன்துடுவ*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, ஓகத்து 14.*

*9-225*

---

*2015 இன் இல. 349*

*எம்ஓடி/டீஈஎப்/2/01/ஈஎன்எல்/03/ஓஆர்சீ.*

### *இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை*

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

*பின்வரும் பெயருடைய அதிகாரவாணை உத்தியோகத்தர் 2014, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் லெப்டினன்ட் (உபகரணக்கட்டுப்பட்டாளர்) தொழில்நுட்ப உத்தியோகத்தராக அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் அவரின் பெயரின் முன்னே குறிப்பிட்டிருக்கும் அணிக்கு உள்ளிடுதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*போ/601218 அதிகாரவாணை உத்தியோகத்தர் எம்ஏஎஸ் பிரியசாந்த இதபோகசிக்கு கிட்டிய சிரேஷ்ட பட்டியலுக்கு அமைவாக லெப்டினன்ட் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) தொழில்நுட்ப வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

*போ/700731 அதிகாரவாணை உத்தியோகத்தர் I எதிரிசிங்க ஆரச்சிலாகே தர்ஷன சமீர எதிரிசிங்க, இலங்கைத் தரைப்படை பொது சேவைச் சிறப்பணி*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, ஓகத்து 14.*

*9-137*

---

*2015 இன் இல. 350*

*டிஐஆர்எப்/ஆர்ஈசீரீ/252/ஏவை.*

### *இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை*

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

*பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர் 2014.11.30 ஆந் திகதி முதல் பின்வரும் அட்டவணையின் பிரகாரம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் அவரவர் பெயர்களின் முன்னே குறிப்பிட்டிருக்கும் அணிகளுக்கும் சிறப்பணிகளுக்கும் உள்ளிடுதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*சி/57144 கெடெற் உத்தியோகத்தர் ஹிங்குரலகே கயான் றொசன்த சந்தருவன், இலங்கை பீரங்கிப்படை*

*சி/57381 கெடெற் உத்தியோகத்தர் திசாநாயக முதியான்சேலாகே துஷார மதுரங்க திசாநாயக, இலங்கை சைகைச் சிறப்பணி*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, ஓகத்து 14.*

*9-136*

*2015 இன் இல. 351*

எம்ஓடி/டிஈஎப்/2/01/ஈஎன்எல்/09/யூஎன்ஐ.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

பின்வரும் பெயருடைய கெகெடற் உத்தியோகத்தர் 2015, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினனன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் இலங்கைத் தரைப்படை மருத்துவச் சிறப்பணிக்கு உள்ளிடுதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

சி/58565 கெடெற் உத்தியோகத்தர் ரன்கலஸ்கே மஞ்சுல பிரபாத் அபேசிங்க

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, ஓகத்து 14.

9-138

*2015 இன் இல. 352*

எம்ஓடி/டீஈஎப்/2/01/ஈஎன்எல்/13/என்டிரீ.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

பின்வரும் பெயருடைய கெகெடற் உத்தியோகத்தர் 2015, மாச்சு மாதம் 19ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினனன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் எந்திரிகள் சேவை அணிக்கு உள்ளிடுதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது:-

சி/58621 கெடெற் உத்தியோகத்தர் விலியம் அபேநந்தகே துலங்க சம்பத் அபேநந்த

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, ஓகத்து 14.

9-224

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**யாத்திரைகள் கட்டளைச் சட்டம்**

பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வருடாந்த உற்சவம் - 2015

**கல்முனை பிரதேச செயலகம் தமிழ்ப் பிரிவு - அம்பாறை**

மேற்குறிப்பிட்ட உற்சவம் 2015.09.08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து 2015.09.26 ஆந் திகதி சனிக்கிழமை பூர்த்தியடையும் என்பதனை யாத்திரிகர்களுக்கும் இவ் உற்சவத்தோடு சம்பந்தப் பட்டவர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1951 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி வெளியிடப்பட்ட 10247 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் யாவற்றையும் யாத்திரிகர்களும் இவ் உற்சவத்தோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் கவனத்தில் எடுக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இவ் உற்வசத்தின் முகாம் பின்வருமாறு விஸ்தரிக்கப்பட்டுள்ளது:

வடக்கு : பாண்டிருப்பு பிள்ளையார் கோவில்;
கிழக்கு : பாண்டிருப்பு கடற்கரை வீதி;
தெற்கு : பாண்டிருப்பு கல்முனை எல்லை வீதி;
மேற்கு : பாண்டிருப்பு பெரிய குளக்கட்டு.

க. லவநாதன்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
கல்முனை (த.பி).

9-122

**காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

*கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுதிகளுக்குரிய முதலாவது நிரலில் காணப்படும் தற்பொழுது சிதைவடைந்து அல்லது கிழிந்துபோயுள்ள காணியினை பதிவு செய்த புத்தகம்/ஏடு மீண்டும் பூரணமாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதனால் காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) 4 ஆவது பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கின்றேன்.*

*2. 2015.09.11 ஆந் திகதி தொடக்கம் 2015.09.25 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் எந்தவொரு நபருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக ஏட்டினை தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிசீலனை செய்து பார்க்க முடியும்.*

*3. அத்தற்காலிக ஏட்டில் எதுவிதமான அல்லது அதன் குறிப்பில் அடங்கியுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாக எந்தவிதமான ஆட்சேபனையினை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் நபர் அல்லது ஏதாவது குறிப்பு அல்லது ஏதாவது குறிப்பினால் விடப்பட்டிருக்கும் விடயத்தினை சேர்ப்பதற்கு வேண்டுகோளினை சமர்ப்பிக்கும் நபர் அந்த ஆட்சேபனையினை அல்லது வேண்டுகோள் அடங்கிய கடிதத்தினை விபரத்துடனும் தெளிவாக அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனும் 2015.10.02 ஆந் திகதிக்கு முன்பதாக இங்கு கீழ் கையொப்பம் இட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | காணியின் விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| 1. கொழும்பு மாவட்டத்தின் தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பிரிவின் M பிரிவின் 3030 ஆவது புத்தகத்தின் 08 வது ஏடு. | மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் பல்லேபற்று சல்பிட்டி கோறளையில் பொலன்வத்தையில் அமைந்துள்ள "தெல்கஹவத்த மற்றும் இந்திகஹவத்த மற்றும் ரத்தாதெனிய அல்லது பொக்குணேகும்புர" என்னும் இடத்திலிருந்து பிரித் தொதுக்கப்பட்ட 18 என்னும் இலக்கமுடைய காணித்துண்டுக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்ரமசிங்க அவர்களினால் 2006.09.25 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 9243 ஆம் அளவீட்டின் பிரகாரம் எல்லைகள் :-<br><br>வடக்கு : லொட் 17;<br>கிழக்கு : லொட் 17 ;<br>தெற்கு : கே. டி. சேதிரிஸ் இற்கு சொந்தமான காணி;<br>மேற்கு : லொட் 1, D1<br><br>விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 11பே. | 1. எல். ஜே. தாப்ரு பி. நொ. ஆல் எழுதி உறுதிப் படுத்தப்பட்ட 2007.03.01ஆந் திகதிய 3569ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி.<br><br>2. எஸ். நாணயக்கார பி. நொ. ஆல். எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2007.10.18 ஆந் திகதிய 2317 ஆம் இலக்கமுடைய மேலதிக அறுதி உடன்படிக்கை.<br><br>3. எஸ். நாணயக்கார பி. நொ. ஆல். எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2007.10.31ஆந் திகதிய 2322 ஆம் இலக்கமுடைய மேலதிக அறுதி உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பி/11/2/42/2015/ஏடு. தயாரித்தல்
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

9-150

---

**காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

*கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுதிகளுக்குரிய முதலாவது நிரலில் காணப்படும் தற்பொழுது சிதைவடைந்து அல்லது கிழிந்துபோயுள்ள காணியினை பதிவு செய்த புத்தகம்/ஏடு மீண்டும் பூரணமாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதனால் காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) 4 ஆவது பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கின்றேன்.*

2. 2015.09.04 ஆந் திகதி தொடக்கம் 2015.09.18 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் எந்தவொரு நபருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக ஏட்டினை கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிசீலனை செய்து பார்க்க முடியும்.

3. அத்தற்காலிக ஏட்டில் எதுவிதமான அல்லது அதன் குறிப்பில் அடங்கியுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாக எந்தவிதமான ஆட்சேபனையினை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் நபர் அல்லது ஏதாவது குறிப்பு அல்லது ஏதாவது குறிப்பினால் விடப்பட்டிருக்கும் விடயத்தினை சேர்ப்பதற்கு வேண்டுகோளினை சமர்ப்பிக்கும் நபர் மூலம் அந்த ஆட்சேபனையினை அல்லது வேண்டுகோள் அடங்கிய கடிதத்தினை விபரத்துடனும் தெளிவாக அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனும் 2015.09.25 ஆந் திகதிக்கு முன்பதாக இங்கு கீழ் கையொப்பம் இட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | காணியின் விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| 1. கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் பிரிவின் C எனும் பிரிவில் 410 ஆவது புத்தகத்தின் 76 வது ஏடு. | மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் அதிகாரி பற்று சியனே கோறளையில் அமைந்துள்ள "ஹுனுபிட்டியே குருந்துவத்த மற்றும் தவட்டகஹவத்த" என்னும் இடத்தின் B2 ஆம் இலக்க காணித்துண்டிற்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ. எப். சமீர் அவர்களால் 1977.04.30 ஆந் திகதி அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 1907ஆம் அளவிடையன் பிரகாரம் எல்லைகள் :-<br>வடக்கு : லொட் B1;<br>கிழக்கு : பாதை ;<br>தெற்கு : லொட் B3;<br>மேற்கு : எல். ஏ. எப். அமரதுங்க மற்றும் ஏனையோருக்கு உரித்தான காணி.<br>விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 25.6பே. | 1. டபிள்யூ. எம். சீ. ஏ. நக்காவிட்ட பி. நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1977.06.07 ஆந் திகதிய 2783 ஆம் இலக்கம் உடைய அறுதி உறுதி.<br>2. டி. எல். ஆர். பொன்வீர பி. நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.07.09 ஆந் திகதிய 1207 ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பி/11/2/44/2015/ஏடு. தயாரித்தல்
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

9-168

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**மக்கள் வங்கி - கொட்டாஞ்சேனைக் கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2015.06.26 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"PV இல. 20466 இன் கீழ் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகவுள்ளதும், களனி, பொல்ஹேனை, 174/2 ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான யசுகோ லங்கா பிறைவேட் லிமிட்டெட், களனி, பொல்ஹேன 174/ 2 ஆம் இலக்கத்தைக் சேர்ந்த கொடிதுவக்கு முதலிகே ரவிந்திர பிரியலால் என்பவரும், மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. தீப்தி, ஆர். மெண்டிஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009.04.06 ஆந் திகதிய 3707 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பிரியாந்தி லியனகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.05.03 ஆந் திகதிய 4782 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனராதலாலும், சொல்லப்பட்ட 3707 ஆம், 4782 ஆம் இலக்க முறிகள்மீது 2015.03.17 அன்றுள்ளவாறு அறுபத்தொன்பது இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து இருபத்திரண்டு ரூபா இருபத்திரண்டு சதம் (ரூ. 69,39,022.22)

கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. அறுபத்தொன்பது இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து இருபத்திரண்டு ரூபா இருபத்திரண்டு சதம் (ரூ. 69,39,022.22) கொண்ட தொகையை 2015.03.18 ஆந் திகதி முதல் விற்பனை இருபத்தி நான்கு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (ரூ. 24,75,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 26% வீதப்படியான வட்டியுடனும், 2015.03.18 ஆந் திகதி விற்பனைத் திகதி வரை ஒன்பது இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று எண்பத்தேழு ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூ. 8,39,787.99) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 15 வீதப்படியான வட்டியுடனும், 2015.03.18 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை இரண்டு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து நூற்று நாற்பது ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூ. 2,54,140.34) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 15% வீதப்படியான வட்டியுடனும், நாற்பத்தொரு இலட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்றுப்பதினாறு ரூபா (ரூ. 41,60,616.00) செலவுத் தொகைகளையும் வேறு விற்பனை இறுப்பனவுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் (எவையேனும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட ஈட்டு முறிகளினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஈ. எஸ். ராமநாயக்க அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் மக்கள் வங்கிச் சட்டத்தினால் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சியனே கோறளையின் அதிகாரி பத்துவில் களனிப் பிரதேச சபை எல்லைகளின் களனிக் கூறினுள் களனியில் பொல்ஹேனவில் அமைந்துள்ளதும், "மில்லகஹாவத்த மற்றும் ஹிக்கஹாவத்த" எனவழைக்கப்பட்டு அறியப் பட்ட காணியினதாய் வீடமைப்புத்திட்ட வீதியில் 254/3 ஆம் வரிமதிப் பீட்டிலக்கத்தைக் கொண்டதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பி. எல். பர்னாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, ஓகத்து 21 ஆந் திகதியிடப்பட்ட 2458 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் ''காணித்துண்டம் A'' எனவடையாளமிடப் பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட "காணித்துண்டம் A" பின்வரும் எல்லை களையுடையது - வடக்கு : 2439 ஆம் இலக்க வரைபடத்தில் காணித் துண்டம் "x" மற்றும் எஸ். ஏ. சிரிசேன மற்றும் ஏனையோரின் காணி ; கிழக்கு : 70/1986 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் ''2'' மற்றும் ''4'' அத்துடன் 2457 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் "B1" ; தெற்கு: அரச காணி மற்றும் ; மேற்கு : எஸ். ஏ. சிரிசேன மற்றும் ஏனையோரின் காணி ; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் இரண்டு றூட் இருபத்தேழு பேர்ச். (0ஏ. 2றூ. 27பே.) கொண்டுள்ள துடன், கொழும்புக் காணிப் பதிவகத்தில் C683/224 இன் கீழ் பதிவு கீழ் பதியப்பட்டு உள்ளது.

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி,

பிரதம முகாமையாளர்,
(கொழும்பு தெற்கு).

மக்கள் வங்கி,
வலயத் தலைமையலுவலகம், (மேற்கு வலயம் - 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

9-116

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி

### 1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 1635800 - மொஹமட் லாபீர் மொஹமட் சியாட்

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் 2015.06.26 ஆந் திகதி கூடிய கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

''லப்சொண் டிரேட் சென்டர் என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் கடன் எடுத்த மொஹமட் லாபீர் மொஹமட் சியாட் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. டி. ரணகலவின் 2012.03.15 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இல. 1618 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறு புரிந்துள்ளதாலும், மேலும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சிக்கு இம்முறி மூலம் 2015.04.28 ஆந் திகதி வரை ரூபா 1,10,02,672 வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4வது சிறப்பு சட்டத்தின் படி மேற்படி முறி இலக்கம் 1618 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி கூறப்பட்ட பணத்தொகை யான ரூபா 1,10,02,672 உடனும் 2015.04.29 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 96,85,000 க்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 17% வட்டியும் மற்றும் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகள் சேர்த்து (பணம் செலுத்தியிருப்பின் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2 ஆவது மாடியில் அமைந்துள்ள ஏலதாரர்கள் திரிவிண்கா அன்ட் சேனநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல்.பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப் பட்டுள்ளது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மெதபத்து சியன கோறளையில் திஹாரிய கிராமத்தில் அமைந்துள்ள தெல்காவத்த எட்டம்பகஹவத்த, நுகஹலந்த மற்றும் எட்டம்பஹலந்த காணிக்கு நிலஅளவையாளர் ஏ. ரூபசிங்க 2011.11.27 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 194/2011 இல் காட்டப்பட்ட பகுதிபடுத்திய லொட் 9B1 காணியின் எல்லைகள் - வடகிழக்கு: முஸ்லிம் பள்ளிவாசல் எம். ஹம்ஸா, எம். நஸார் மற்றும் எம். ரஹ்மானின் காணி இல. 2313 இல் குறிப்பிடப்பட்ட லொட் B2 ; தென்கிழக்கு : லொட் 9B2 ; தென்மேற்கு : வரைபட இல. 2386 இல் காட்டப்பட்டலொட் 8C (15 அடி அகல ஒதுக்கப்பட்ட பாதை) ; வடமேற்கு : வரைபட இல. 128/A/2011 இல் காண்பிக்கப்பட்ட லொட் 9A இக் காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் பத்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ.10பே.) மேற்படிவரைபட இல. 194/2011 படி,

மேற்கூறப்பட்ட காணி கீழ் விபரிக்கப்பட்ட காணியின் பகுதிபடுத்திய காணித்துண்டாகும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மெதபத்து சியன கோறளையில் திஹாரிய கிராமத்தில் அமைந்துள்ள தெல்காவத்த

எட்டம்பகஹவத்த, நுகஹலந்த மற்றும் எட்டம்பஹலந்த காணிக்கு நிலஅளவையாளர் ஏ. எப். சமீர் 1980.10.05 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2386 இல் காட்டப்பட்ட லொட் 9 காணியின் எல்லைகள் - வடகிழக்கு: வரைபட இல. 2313 இல் காட்டப்பட்ட லொட் B2 ; தென்கிழக்கு : லொட் 10 ; தென்மேற்கு : லொட் 8 ரோட் ; வடமேற்கு: லொட் 7 ; இக் காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் (1ஏ. 0று.0பே.) மேற்படிவரைபட இல. 2386 இன் படி, இக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் E 1020/246 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழ் விபரிக்கப்பட்ட காணி ஊடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மெதபத்து சியன கோரளையில் திஹாரிய கிராமத்தில் அமைந்துள்ள தெல்காவத்த எட்டம்பகஹவத்த, நுகஹலந்த மற்றும் எட்டம்பஹலந்த காணிக்கு நிலஅளவையாளர் ஏ. எப். சமீர் 1980.10.05 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2386 இல் காட்டப்பட்ட பகுதிபடுத்திய லொட் 8 (பாதை) காணியின் எல்லைகள் - வடகிழக்கு: லொட் 6, 7, 9 மற்றும் 10 ; தென்கிழக்கு : கொழும்பு- கண்டி பிரதான வீதி ; தென்மேற்கு : லொட் 1, 2, 3 மற்றும் 4 ; வடமேற்கு : லொட் 5 ; இக் காணியின் விஸ்தீரணம் ஒன்று தசம் ஒன்று ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0று. 1.15பே.) மேற்படிவரைபட இல. 2386 படி, இக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் E 209/266 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ரன்ஜனி கமகே,
கம்பனி செயலாளர்.

9- 266

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

(வென்னப்புவை கிளை) -வாடிக்கையாளரின் பெயர்: ஐ. பீ. சீ. இன்ஜினிரியரிங் பிறைவேட் லிமிட்டெட்

2015.06.24 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

''கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான ஐ.பீ. சீ. இன்ஜினியரிங் பிறைவேட் லிமிட்டெட் பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். ஆர். எல். சீ. ரணசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013, யூலை 24 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 388 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். என். ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2012, யூலை 05 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 5026 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 5026 மற்றும் 388 ஆகியவற்றின் மூலம் கொடுப்பனவு திகதிவரை,

(அ) 2015.05.25 ஆந் திகதியிலிருந்து ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 50,00,000) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பத்தொன்பது வீத (19%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது ஐம்பத்தொன்பதுஇலட்சத்து ஐநூற்று நாற்பத்தேழு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 59,00,547.92) கொண்ட தொகை மற்றும் 2015, மே 24 ஆந் திகதிவரையான வட்டியும்,

அல்லது

(ஆ) 2015.05.25 ஆந் திகதியிலிருந்து இரண்டு கோடியே முப்பத்திரண்டு இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து அறுநூற்று இருபத்தேழு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 2,32,63,627.90) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்து நான்கு வீத (24%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது இரண்டு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஏழு ரூபா அறுபது சதம் (ரூ.2,35,39,697.60) கொண்ட தொகை மற்றும் 2015, மே 24 ஆந் திகதி வரையான வட்டியும்,

தற்போது வரவேண்டியும் உரியதாகவுள்ளதாத லாலும்,

சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 5026 மற்றும் 388 ஆகியவற்றின் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை இரண்டு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து நாற்பதாயிரத்து இருநூற்று நாற்பத்தைந்து ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 2,94,40,245.52) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனங்களை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/3 (50/3) ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கின்றது.''.

**அட்டவணை**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், (கொழும்பு பதிவுப் பிரிவிற்குள், கொழும்பு மாநகரசபை எல்லைகளுக்குள், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, வட்டார இல.23 ஹுனுபிட்டி, கொம்பனி வீதியில் அமைந்துள்ளதும் வொக்ஷோல் தெரு, வரிமதிப்பு இல. 273/5 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. கல்லகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 1991, மாச்சு 02 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 10/91 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. டீ. எம். ஜே. ரூப்பசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1985.01.21 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 394 (சீஎச்/ ஓ/ 202/ 3953) இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்ட அதுவேவான காணியின் ஒரு மீள்நில அளவையாக இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும்

எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு ஏ இன் எல்லைகளாவன - வடக்கு : வொக்ஸ்சோல் தெரு, வரிமதிப்பு இல. 273/4 ஐக் கொண்ட வளவுகள் மற்றும் அரச காணி; கிழக்கு : அரச காணி ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வில்பிரட் தந்தநாராயண அவர்களால் தயாரிக்கப்பட்டு 1976.04.19 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 429 (சீஎச்/ஓ/3/202/279) இல் துண்டு 4 ; மேற்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ.டீ. எம். ஜே. ரூப்பசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1985.01.21ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 394(சீஎச்/ஓ/202/3953) இல் துண்டு 2. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல.10/91 இற்கமைய ஐந்து தசம் ஒன்பது நான்கு பேர்ச்சு (0ஏ. 0றூ. 5.94பே.) விஸ்தீரணமுடையது. கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு ஏ 1044/104 மற்றும் ஏ1044/262 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் வீதி ஒதுக்கு வழியேயும் கீழும் மீதுமான மற்றெல்லா தொடர்புபட்ட உரிமைகள் மற்றும் வழியுரிமையுடன் சேர்த்து.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், (கொழும்பு பதிவுப் பிரிவிற்குள்), மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, வட்டார இல.23 ஹுனுபிட்டி, கொம்பனி வீதியில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. தந்தநாராயண அவர்களால் தயாரிக்கப்பட்டு 1976.04.19 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 429 (சீஎச்/ஓ/3/202/279) இல் குறிப்பிடப்பட்டு துண்டு 4 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 4 இன் எல்லைகளாவன - வடகிழக்கு : வொக்ஸ்சோல் தெரு ; தென்கிழக்கு : துண்டு 6 ; தென்மேற்கு : வொக்ஸ்சோல் தெரு, அத்துடன் துண்டு 1, 2 மற்றும் 3; வடமேற்கு : வொக்ஸ்சோல் தெரு, வரிமதிப்பு இல. 267 ஐக் கொண்ட வளவுகள். இது. சொல்லப்பட்ட வரைபடம் இல. 429 இற்கமைய நான்கு தசம் எட்டு ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 4.85பே.) விஸ்தீரணமுடையது. கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு ஏ 1163/143 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (கம்பஹா பதிவுப் பிரிவிற்குள்), ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு, வெலிகம்பிட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவினுள், ஜா-எல மாநகர சபை எல்லைகளுக்குள், வட்டார இல. 2, இந்திவிட்டி, வெலிகம்பிட்டியில் அமைந்துள்ளதும் ஜாஎல, ''லேக் சிற்றி ஹோம்ஸ்'' 39 ஆம் ஒழுங்கை, வரிமதிப்பு இல. 435 ஐக் கொண்டதும் ''லேக் சிற்றி'' என தற்போது அழைக்கப்படும் ''பூவெல்ல'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சுபசிறி லியனகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 2003, யூன் 02 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 224 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 435 (நில அளவையாளர் நாயகத்தினால் உறுதி செய்யப்பட்டு 1991, ஓகத்து 20 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. பீபீ சீஓ 1638 இல் குறிப்பிடப்பட்ட, ஒன்றிணைக்கப்பட்ட துண்டுகள் 1, 2, 3 மற்றும் 4 இன் பாகங்களின் ஒரு உபபிரிவாகவும் மீள் நிலஅளவையாகவுமிருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 435 இன் எல்லைகளாவன - வடக்கு : வாய்க்கால் ; கிழக்கு : துண்டு 436 ; தெற்கு : துண்டு ஆர்39 (வீதி 6 மீற்றர்அகலம்) ; மேற்கு : துண்டு 434 ; இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 224 இற்கமைய எட்டு பேர்ச்சு (0ஏ. 0றூ. 8பே.) அல்லது 0.0202 ஹெக்டயார் விஸ்தீரண முடையது. கம்பஹா காணிப் பதிவகத்தில் தலைப்பு எச் 64/244 மற்றும் ஜே75/61 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 224 இல் குறிப்பிடப்பட்ட பின்வரும் வீதி ஒதுக்குகளின் வழியேயும் மீதுமான வழியுரிமை மற்றும் ஏனைய உரிமைகளுடனும் சேர்த்து.

ஆர்1, ஆர்2, ஆர்3, ஆர்4, ஆர்5, ஆர்6, ஆர்7, ஆர்8, ஆர்9, ஆர்10, ஆர்11, ஆர்12, ஆர்13, ஆர்14, ஆர்15, ஆர்16, ஆர்17, ஆர்18, ஆர்19, ஆர்20, ஆர்21, ஆர்22, ஆர்23, ஆர்24, ஆர்25, ஆர்26, ஆர் 27, ஆர்28, ஆர்29, ஆர்30, ஆர்31, ஆர்32, ஆர்33, ஆர்34, ஆர்35, ஆர்36, ஆர்37, ஆர் 38, ஆர் 39, ஆர் 40, ஆர் 41, ஆர் 42, மற்றும் ஆர் 43 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டுகள்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - அறவீடுகள்

8-254

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி

1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 1380089 - நிவ்பேர்னாட்ஸ் அனிமல் பீட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
30.03.2015 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

''கடன் எடுத்த உடபடுவ நிவகட ரோட் என்ற பதிவு விலாசத்தில் அமைந்துள்ள கம்பனி சட்டப்படி நிறுவப்பட்ட நிவ்பேர்னாட்ஸ் அனிமல் பீட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்து வெள்ளவத்தை கே. லெஸ்லி பேர்னாட் பெரேரா கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பி. பீரிஸ் 2012.11.07 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இல. 49 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சிக்கு ஈடுவைத்து செலுத்தவேண்டிய கொடுப்பனவில் தவறு புரிந்துள்ளதாலும் அத்துடன் 2015.01.30 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சிக்கு ரூபா 5,20,29,889.83 வருமதியாக உள்ளதாலும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4வது சிறப்பு சட்டத்தின் படி மேற்படி முறி இலக்கம் 49 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி கூறப்பட்ட பணத்தொகையான ரூபா 5,20,29,889.83 உடனும்2015.01.31 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 4,46,58,000 க்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 9.33(PLR+3%Pa) வட்டியும் 2015.01.31 திகதி முதல் ஏலத்திகதி வரையும் மற்றும் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகள் சேர்த்து (பணம்

செலுத்தியிருப்பின் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு 12 புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2 ஆவது மாடியில் அமைந்துள்ள ஏலதாரர்கள் திரிவிண்கா அன்ட் சேனநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல்.பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப் பட்டுள்ளது.''

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல கோரளை வடக்கு கட்டுகம்பொல அத்தபத்து புனாபொல கிராமத்தில் புனாபொல கிராம அலுவலர் மற்றும் உடுபடுவ பிரதேச செயலாளர் எல்லையில் அமைந்துள்ள இயல்பிட்டிய மற்றும் கட்டுகம்பொலவத்த என்ற காணிக்கு நில அளவையாளர் எம். ஜே. கோமஸ் 1998.11.08 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 3328 இல் காட்டப்பட்ட பகுதிபடுத்திய காணித்துண்டு லொட் 1 எல்லைகள் - வடக்கு : எஸ். வி. பெரேராவின் வரைபட இல. 100/76 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2 இக் காணியின் மிகுதிப் பகுதி ; கிழக்கு : பிரதேச சபை வீதி ; தெற்கு: எஸ். ஏ. வி. பெரேராவின் வரைபட இல. 100/76 இல் காண்பிக்கப்பட்ட லொட் 05 A, மற்றும் 10 ; மேற்கு : எம். ஜே. கோமஸ் வரைபட இல.3328 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2 மற்றும் எஸ். ஏ. வி. பெரேராவின் வரைபட இல. 100/76 காண்பிக்கப்பட்ட லொட் 1 எஸ். ஏ. எஸ். விஜேசிங்கவுக்கு சொந்தமானது.

இக் காணியின் விஸ்தீரணம் 0ஏ. 2றூ. 16.05பே. மேற்படி சொல்லப்பட்ட வரைபடம் இல. 3328 இன் படி இக் காணி குளியாபிட்டி காணிப் பதிவகத்தில் K 273/51 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ரன்ஜனி கமகே,
கம்பனி செயலாளர்.

9- 267

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவினதும் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

2015.08.06 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

''1. பிரசித்த நொத்தாரிசு டி. வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2012.06.20 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1750 இன்பேரில் பாணந்துறை, குருப்புமுல்ல, இல. 65 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் நுரானி டிஸ்ரிபியூட்டர்ஸிடமிருந்து (ஏக உரிமையாளர், பாணந்துறை, குருப்புமுல்ல, இல. 103/D ஐச் சேர்ந்த திருமதி நுரானி நயனபிரிய சேனநாயக்க) 2015.06.02 வரை முதலும் வட்டியும் எண்பது இலட்சத்து நாற்பத்தோராயிரத்து ஐநூற்று எண்பத்துமூன்று ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ.80,41,583.64) அத்துடன் ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 50,00,000) ஆண்டுக்கு பதிநான்கு (14%) வீதத்தில் 2015.06.03 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. 2012.06.20 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1750 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட எண்பது இலட்சத்து நாற்பத்தோராயிரத்து ஐநூற்று எண்பத்துமூன்று ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ.80,41,583.64) அத்துடன் 2015.06.03 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடு வைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தினதும் (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பாணந்துறை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.''.

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் தொட்டமுனை பாணந்துறை, பாணந்துறை தல்பிட்டி தெபத்தயில் பாணந்துறை பட்டிண சபை எல்லைகளுள் 682A குருப்புமுல்ல கிராம அலுவலர் பிரிவில் குருப்புமுல்ல பாதையில் வரிமதிப்பிலக்கம் 103/D ஐக் கொண்ட குருப்புமுல்லயில் அமைந்த ''கஹட்டகஹவத்த அல்லது பறங்கியாவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. என். விக்ரமரத்ன தயாரித்த 2006, திசெம்பர் 23 ஆந் திகதியிட்டவரைபடம் இல. 2044 இல் விபரித்த துண்டு 1A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. எஸ். குணதிலக தயாரித்த 1946, நவெம்பர் 19 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 532 இல்விபரித்த அதே காணியின் துண்டு 1B மற்றும் 2 உம்; கிழக்கு : வரைபடம் இல. 532 இல் துண்டு 2 உம் ; தெற்கு : பாணந்துறையிலிருந்து மலேமுல்லை வரை நெடும்பாதையும் ; மேற்கு : கோங்கஹவத்தயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2044 இன் படி பத்தொன்பது தசம் நான்கு ஒன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 19.41பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணியின் துண்டு 1A கீழே விபரித்த பின்வரும் காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்டவாறு குருப்புமுல்லயில் அமைந்த ''கஹட்டகஹவத்த அல்லது பறங்கியாவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். டி. எஸ். குணதிலக தயாரித்த 1968, செத்தெம்பர் 15 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3686 இல் விபரித்த துண்டு 1A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : வரைபடம் இல.532 இல் துண்டு 1B மற்றும் 2; கிழக்கு : வரைபடம் இல. 532 இல் துண்டு உம் ; தெற்கு : பாணந்துறையிலிருந்து மலேமுல்ல வரை பெருந்தெருவும் ; மேற்கு : கோங்கஹவத்தயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3686 இன் படி இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும்

ஆகும். இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் F 539/29 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. என். டி. எல்.புஷ்பகுமார,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பாணந்துறை,

9- 300

---

## மக்கள் வங்கி - மாதம்பைக் கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2015.04.23 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"மாரவில பிரசித்த நொத்தாரிசு திருமதி பி. ரி. எஸ். ரன்சிரிணி ஜோசப் அவர்களால் 2011.09.28 ஆந் திகததி 62,00,000 க்காக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 403 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீதும், 2011.09.28 ஆந் திகதி ரூபா 10,00,000 க்காக அத்தாட்சிப் படுத்தப்பட்ட 405 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும் செலுத்த வேண்டிய கொடுப்பனவு.

திரு. வர்ணகுலசூரிய கிங்ஸ்லி பெரேரா, தெலிகட பல்லியகுருகே ரமனி இந்திராணி அல்விஸ், வர்ணகுலசூரிய இசாரா சியாமங்கி பெரேரா என்பவர்களால் மக்கள் வங்கியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டு முறியின் மீது இருபத்தொன்பதுஇலட்சத்துஎழுபத்தேழாயிரத்து அறுநூற்று அறுபத்தைந்து ரூபா இருபது சதம் (ரூ. 29,77,665.20) மற்றும் பத்து இலட்சம் (ரூ. 10,00,000) தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட இருபத்தொன்பது இலட்சத்து எழுபத்தேழாயிரத்து அறுநூற்று அறுபத்தைந்து ரூபா இருபது சதம் (ரூ.29,77,665.20) மற்றும் பத்து இலட்சம் (ரூ. 10,00,000) அத்துடன் இருபத்தெட்டு இலட்சத்து தொண்ணூற்றுமூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூ. 28,93,333.44) மீது 2015.01.01 ஆந் திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை ஆண்டொன்றுக்கு பதின்நான்கு தசம் ஐந்து (14.5%) சதவிகிதப்படி வட்டியும் ஏலவிற்பனை திகதி வரை தொடர்ந்து வட்டியையும், பத்து இலட்சம் ரூபா (ரூ. 10,00,000) மீது, 2014.12.01 ஆந் திகதி முதல் ஏலவிற்பனைத் திகதி வரை ஆண்டொன்றக்கு பதினைந்து தசம் ஐந்து (15.5%) சதவிகிதப்படி வட்டியும் ஏலவிற்பனை திகதி வரை தொடர்ந்தும் வட்டியையும், குறிப்பிட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழ் அறவிடப்படவேண்டி பணம், செலவுகள் உட்பட அதன் பின்னர் கொடுப்பனவுகள் ஏதும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து ஒரேமுறையில் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 403 மற்றும் 405 ஆம் இலக்க ஈட்டு முறிகளினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் அன்ட் சமரவிக்ரம கம்பனியினால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குளியாபிட்டிய காணிப்பதிவகப் பிரிவிற்கு உட்பட்டகட்டுகம்பல ஹத்பத்துவ,தெற்கு கட்டுகம்பல கோறளை,புன்னெஹெபொல என்ற கிராமத்தில் அமைந்துள்ள, "இலஹபிடிய கட்டுகம்பல எஸ்டேட்" என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஜே. ஏ. எஸ். ஜயலத் அவர்களால் 2008.05.11 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 15/08 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் 01 ஆம் இலக்க காணிக்கான எல்லைகள் - வடக்கு : மாதம்பையிலிருந்த குருநாகல் வரை செல்லும் பிரதானபாதை ; கிழக்கு : எஸ். ஏ. சுசிலா விஜேசிங்ஹவுக்குச் சொந்தமான காணி ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஜே. எல். வீரவர்தன அவர்களின் 3646 ஆம் இலக்க வரைபடத்தின் 04 ஆம் இலக்க காணி ; மேற்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஜே. எல். வீரவர்தன அவர்களின் 3646 ஆம் இலக்க வரைபடத்தின் 08 ஆம் இலக்க காணி என்ற எல்லைகளுக்குட்பட்ட இரண்டு ஏக்கர் (2ஏ. 0றூ.0பே.) எனப்படும் சைபர் தசம் எட்டு சைபர் ஒன்பது நான்கு ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக. இது குளியாபிட்டிய காணிப் பதிவகத்தில் K/23/136 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி,

பிரதேச முகாமையாளர்,
புத்தளம்.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 79, மாரவில வீதி,
நாத்தாண்டிய.

9-115

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கிளை : கேகாலை

வாடிக்கையாளரின் பெயர் : மொகமட் ஹுசேன் மொகமட் ரபியுடீன், மொகமட் ஜலீல் மொகமட் பௌமி ஜலீல், மொகமட் ரபியுடீன் பாத்திமா ரிஸ்லா, யுனி லங்கா மார்க்கட்டிங் நிறுவனம் என்ற பெயரில் வர்த்தகம்

மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் மொகமட் ஜலீல் மொகமட் பௌமி ஜலீல்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"மொகமட் ஜலீல் மொகமட் பௌமி ஜலீல், மொகமட் ஹுசேன் மொகமட் ரபியுடீன், மொகமட் ரபியுடீன் பாத்திமா ரிஸ்லா கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவபத்திரணவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, ஏப்பிறல்18 ஆந் திகதியிடப்பட்ட 3108 ஆம் இலக்க முறி மற்றும் 2014, யூன் 11ஆந் திகதியிடப்பட்ட 3715 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது எழுபத்து நான்கு இலட்சத்து பதினேழாயிரத்து முந்நூற்று இருபது ரூபா ஐம்பத்து மூன்று சதம் (ரூ. 74,17,320.53) (நிரந்தர மேலதிகபற்று வசதி மட்டும்) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதுடன்,

மொகமட் ஜலீல் மொகமட் பௌமி ஜலீல் உடையவராகவும் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவபத்திரணவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, மார்ச் 6 ஆந் திகதியிடப்பட்ட 3069 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, மே 31 ஆம் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஒரு கோடியே இருபத்தொரு இலட்சத்து எண்பதாயிரத்து முந்நூற்று நாற்பத்தேழு ரூபா அறுபத்தேழு சதம் (ரூ. 1,21,80,347.67) (வீட்டுக் கடன் வசதி மட்டும்) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 3108, 3069 மற்றும் 3715 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூ. 1,95,97,668.20) பணத்தொகையை 2015, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டி. கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கம்பளை நகரம் மற்றும் நகரசபை எல்லைக்குள் உட்பட்ட பகுதி இலக்கம் 2இல் உள்ள இல்லவத்துறவில் உள்ள இல்லவத்துர வீதியின் 30 மற்றும் 32 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட "ஹிற்றினாகெதரவத்த மறுபெயர் உடஹாகெதரவத்த'' என அழைக்கப்படும் காணியின் பகுதி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம் அபயரட்னினால் தயாரிக்கப்பட்ட 1992.04.11 ஆந் திகதியிடப்பட்ட 586/1 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணி. உத்தரவுபெற்ற நிலஅளவையாளரினால் தயாரிக்கப்பட்ட 2009.07.11 ஆந் திகதியிடப்பட்ட அங்கீகாரத்தைக் கொண்ட பத்தொன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 19பே.) அல்லது 0.04805 ஹெக்டயார் விஸ்தீரண்தைக் கொண்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : இலவந்துறை வீதியை பிரிக்கும் கட்டட வடிகால்; கிழக்கு இந்தவளவிற்கு பொதுவான சுவர் மற்றும் 36 ஆம் வரிமதிப்பீட்டிலக் கத்தைக் கொண்டுள்ளதுடன், சொல்லப்பட்ட 586/1 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 என அடையாளம் இடப்படட்ட மிகுதியான பகுதி ; தெற்கு : மகாவலி கங்கை மற்றும் ஆற்றிற்கு செல்லும் ஒற்றையடிப்பாதை; மேற்கு : இல்லவந்துற வீதியின் வரிமதிப் பீட்டிலக்கம் 26 ஐ கொண்ட தறமெற்றியாகே வத்த அத்துடனான கட்டடங்கள் மற்றும் அத்துடன் உள்ள எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

9- 294/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிளை : கல்கிசை
வாடிக்கையாளரின் பெயர் : குருபரன் சுப்பிரமணியம்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"குருபரன் சுப்பிரமணியம் கடப்பாடு உடையவராகவும், சசிகலா குருபரன் அடகு வைத்தவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பாயிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, பெப்புருவரி 13 ஆந் திகதியிடப்பட்ட 156 ஆம் இலக்க முறி, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹலோலுவவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2010, நவெம்பர் 29 ஆந் திகதி இடப்பட்ட 2759 ஆம் இலக்க முறி, பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பீ. வீ. என். டபிள்யூ. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட2012, மாச்சு 6 ஆந் திகதியிடப்பட்ட 3836 ஆம் இலக்க முறி மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹலோலுவவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013, யூன் 27 ஆந் திகதி இடப்பட்ட 3331 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, யூன் 18 ஆம் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஒரு கோடியே இருபது இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எண்பத்திரண்டு ரூபா நாற்பத்து மூன்று சதம் (ரூ. 1,20,57,082.43) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில்

